அவ்வவாவோடு, அவர் வீட்டிற்கு வந்து அதே காரியமாக ஓவியம் தீட்டத் தொடங்கினர். ஒரே நாளில் எண்ணிறந்த சித்திரங்களை எழுதி முடிக்க வல்ல அவர் முப்பது நாட்கள் ஆகியும் தாம் கண்ட காட்சிப்படி சித்திரம் எழுதக்கூடாமல் மனம் சலித்துப் போனர். அவர் எழுதியிருந்த அச்சித்திரத்தில் நன்கு அமையாதிருந்த அம்சம் யாதெனில், அந்நாயின் நுரை தள்ளியிருந்த வாய் ஒன்று தான். அவர் இக்குறையை எண்ணி மனம் நொந்து இருக்கையில், சோதிடர் ஒருவர் வந்து, "நீர் என்ன தான் பிரயாசைப் பட்டாலும் அம் முயற்சி அனைத்தும் விழலுக்கிறைந்த நீராகும்; உமக்கு இன்னும் பதினைந்து நாட்கள் வரையிலும் இக்காரியம் பலிதமாகாது" எனக் கூறிச் சென்றார்.

சோதிடர் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடன் சோமவர்மரது முகத்தில் கோபம் தாண்டவமாடியது. "ஆ! இந்த அற்ப வேலைக்கும் ஆங்காலம் ஒன்று வேண்டுமா? இதோ நான் நாளையே முடித்து விடுகிறேன்" என்று தமக்குள் கூறிக் கொண்டவராய்த் தம்மால் ஆன வரையில் முயன்று பார்த்தார். சோதிடர் சொல்லிய பதினைந்து நாட்களும் கடந்தன. இன்னும் அவருக்குச் சித்திரம் பூர்த்தியானபாடில்லை. அதைக் கண்ட அவர் வெகு கோபங் கொண்டு தாம் துடைப்பதற்கு வைத்திருந்த கடற் பஞ்சை எடுத்து, அக்குறைச் சித்திரத்தின் மீது வீசி எறிந்தார்.

எறிந்தது தான் தாமதம்! அவரது நல்ல காலத்தின் பயனுக, அப்பஞ்சு அந்நாய் உருவின் வாய்ப் புறத்தில் விழுந்து, உண்மையான நுரைபோல் உறைந்து விட்டது. பார்த்தார் சோமவர்மர்! மனதில் பேரானந்தங்கொண்டு, "ஹா! ஹா! எல்லாம் இறைவன் செயல்! மனிதன் தானுகச் செய்து விடுவது ஒன்றுமில்லை. அவனன்றி ஓரணுவும் அசையாதன்றே! மூடச்சனங்கள் கடவுள் செய்து வைக்கும் காரியங்களைத் தாம் செய்ததாக நினைத்து மயங்குகின்றனர்" என்று சொல்லிக்கொண்டு எல்லாம் வல்ல ஈசனைத் தியானித்திருந்தார்.

பெண் கல்வி அவசியம்

BY

D. Sivabhagyam, IV From D. S, H. S.

கல்வி என்பது 'வி' விகுதிபெற்ற தொழிற் பெயராகும். கல்வியானது கடலினும் பெரிது. கற்கக்கற்க அறிவை விசாலப் படுத்துவது. சிற்றுயிர்க்கு உற்ற துணையாய் நின்று உதவுவது. நான்கு புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு, என்னுமிவற்றைத் தரவல்லது, துவக்கத்தில் கஷ்டமாயிருந்தாலும் பின்னால் இன்பத்தைத் தருவது.

இத்தகைய கல்வியை யார் கற்கவேண்டிய தென வினவின், அதற்கு விடையாக ஆண், பெண் என்னும் இரு பாலருக்கும் ரூப வித்தியாசமேயன்றி ஆண்மாவில் பேதமில்லை யெனச் சாஸ்த்திரம் கூறுதலால், ஆண் மாவானது நற்கதியடைய அறிவை விசாலப் படுத்தி ஆண்மாக்களையுடைய இருபாலரும் கல்வி கற்று மேம் பாடடைய வேண்டியதவசியம்.

ஆதலின் கல்வி ஆண் மக்கள் தான் கற்கவேண்டும், பெண் பாலருக்கு அவசியமில்லை யென்பது இக்காலத்திலும் முக்காலத்தி லும் இல்லை யெனக் கூறுவது பொருந்தும் எனெனில், ஔவை நளாயினி, சாவித்திரி, மணிமேகலை, அங்கவை, சங்கவை முதலிய பெண்மணிகள் அக்காலத்தில் ஆச்ரமங்களிலுள்ள துறவிகளின் மூலமாக கல்வி பயின்றார்களென்பதைப் பல நூல்களின் மூலமாக அறிகிறோம்.

இடையில் அநேக அரசர்கள் நம் நாட்டில் படையெடுத்து நம் நாட்டிலுள்ள பெண்களைச் சிறைகொண்டார்களென்பதையும் சரித்திர வாயிலாக அறிகிறோம். அதற்குப் பிறகு நம் நாட்டிலுள்ள இந்து சமூகத்தினர் பெண்களைப் பட்டிக்கவொட்டாமல் தடுக்கின் றனர். எனென்றால் பெண்கள் கல்வி பயில்வதினால் கேவலமும் கெடுதியு முண்டாகின்றன வென்று எண்ணினார்களே யொழிய அதன் நன்மையை உணர்ந்தாரில்லை.

"மன்னருக்குத்-தன் தேயமல்லாற் சிறப்பில்லை;
கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு"

என்று ஆன்றோர்கள் முது மொழிப்படி கல்வி கற்ற பெண் மக்கள் கஷ்டம் வந்த காலத்திலும் தையல், வரைதல், உபாத்திமைத் தொழில் முதலிய வேலைகளைச் செய்து தம் கணவரையும் குழந்தைகளையும் காப்பாற்றும் திறமை வாய்ந்தவர்களா யிருப்பார்கள். சுருங்கச் சொல்லின் கல்வியறிவுள்ள பெண் மக்கள் உணவு விஷயமாகவும் மக்களை வளர்த்தலிலும் சுகாதார முறையையே கையாடிவருவார்கள். கல்வியும் தம் மக்கட்கு பயிற்று விப்பார்கள்.

இத்தகைய கல்வியைப் பயின்று நன்கு அறிவடைந்த பெண் மக்கள் தம்முடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்வதில் வல்லவராய்ச் சிறந்து விளங்குவார்கள். இது பற்றியே தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனாரும்,

''பெண்டிற் பெருந்தக்க யாவுள தற்பென்னும்
திண்மை உண்டாக்கப் பெறின்''

என்றும்,

''தற் காத்துத் தற்கோண்டாற் பேணித்
தகை சான்ற, சோற்காத்துச் சோர்விலாள் பெண்''

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இத்தகைய அரிய பெரிய கல்வியை இருபாலரும் தக்க அறிவை அடையும் வரைப் பயின்று குடும்பபாரத்தை ஏற்று நடத்து வார்களானால் அவர்கள் நன் மக்களை ஈன்று செல்வத்தில் ஓங்கி உயர்ந்து இம்மையில் புகழையும் மறுமையில் மோட்சத்தையும் அடைவார்களென்பது ஒரு தலை. ஆனால் படியாத பெண்ணொருத்தியை நன்கு கற்ற ஒருவனுக்கு வாழ்க்கைப் படுத்தினால் அவர்களுடைய வாழ்க்கைதான் எவ்வாறு இன்பகரமாய் நடக்கும்? மேலும் பெண்கள் படியாததினால் சில சமயங்களில் அவமானமடைவார்களென்பதற்குக் கீழ்வரும்கதையைத் திருஷ்டாந்தமாக எழுதுகிறேன்.

பரதகண்டமென வழங்கி வரும் நமது நாட்டில் நீர்வளம் நிலவளம் பொருந்திய திருச்சிமா நகரின் கண் தமிழ் வித்வான் ஒருவன் வசித்து வந்தான். அவன் கல்வி கேள்வியில்லாத குலத்திலுதித்த பெண்ணொருத்தியைக் கடிமணஞ் செய்துகொண்டான்.

சில நாட்கள் செல்ல ஒரு நாள் அவன் அடுத்த ஊர் மன்னன் பேரில் கவி இயற்றி அதனல் பரிசு பெறலா மென்றெண்ணித் தன் மனைவியிடம் சென்று, 'நான் ஒரு காரியமாக அடுத்த ஊருக்குச் சென்று வருகிறேன், அது வரை நீ பத்திரமாயிரு' என்று சொல்லி அடுத்த ஊருக்கேகினன்.

மறு நாள் அரசனிடம் சென்று தான் இயற்றிக்கொண்டு போன கவியை அதிகத் திறமையுடன் பாடிக்காண்பித்தான். அரசன் அவனுடைய திறமையைக் கண்டு மெச்சி அவனுக்கு அநேக பரிசுகளும் ஒரு குதிரையும் கொடுத்தனுப்பினன். வித்வான் பரிமாவேறி வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அவனைக் கண்ணுற்றதும் அவனுடைய இல்லாள் அவனை வரவேற்று சுகம் என்ன என்று வினவினள். அதற்கு அவன் "வந்தோர் அசுவகம் என்று செப்பினன் அவள் அதன் அர்த்தத்தை உணராது யாருக்கோ (அசுகம்) சுகமில்லையென நினைத்து வருந்தி நின்றாள். இவ்வைதைக் கண்ணுற்ற அவன் எதற்காக இப்படித் திகைத்து நிற்கிறாள் என்று நினைத்து மறுபடியும் 'கோர'மென்றான்.

இவ்வைதச செவியுற்ற அவள் ,ஐயையோ யாருக்கோ அதிக வியாதியாயிருக்கிற'தென்றெண்ணி மயங்கி வருந்தி நின்றாள். இவைகளை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த வித்வான் இவளுக்கு அர்த்தம் விளங்கவில்லை யென நினைத்து 'மா, மா' என்றார். உடனே அவள் தன்னுடைய தகப்பனர்க்குத் தான் அதிக வியாதியாய் இருக்கிறதென்றெண்ணி குரல் எடுத்து அழுக ஆரம்பித்து விட்டாள். அக்கம் பக்கத்து வீட்டார்களெல்லாம் இவளுடைய அழுகையைச் செவியுற்றுக் கூடிவிட்டனர்.

இவ்வைதயெல்லாம் கண்ணுற்ற வித்வான், 'என்னே இவளுடைய மதி! நாம் படிக்காத முட்டாளை மணஞ் செய்ததினலல்ல்வோ இவ்வளவு அவமானமும் நேரிட்டது' என்று நினைத்து, மறுபடியும் 'வாசி' யென்றார் உடனே அவள் தன் தகப்பனர்க்குத்தான் வியாதி தீர்ந்து விட்டதென்று சொல்லுகிறார் என நினைத்து தேறி நின்றாள்.

இன்னும் இவளுக்கு அதனுடைய அர்த்தம் விளங்க வில்லை யென்று நினைத்து அவளை அருகிலழைத்து, 'நான் முன் சொன்ன தெல்லாம் குதிரைக்கு இடப்பட்ட பெயரே, நான் குதிரை வந்திருக்கிறது என்று சொன்னதற்கு நீ ஏதேதோ அர்த்தங் கொண்டு இவ்வளவு அவமானத்தையுமுண்டாக்கினாய்? என்று கோபித்தார். இவைகளை யெல்லாம் செவியுற்ற அவள் வெட்கித்தலை குனிந்து படிக்காத பெண்களின் கதி இக்கதி தான் என்று உணர்ந்தாள்.

நாட்கள் பல ஆயின, ஒரு நாள் சுந்தரி என்னும் தோழி ஒருத்தி அவளைக் காணவந்தாள். இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். கடைசியில் அவள் தன் தோழியை நோக்கி, 'என்னுடைய பெற்றோர்கள் என்னைக் கற்கவிடாமல் முட்டாளாக்கினதினாலல்லவோ ஊரார் சிரிக்க அவமானமடைந்தேன். நானடைந்த அவமானத்தைச் சொல்லுகிறேன். கேள்' என்று

சுந்தரியே புரமேகி வந்த துனை வரை நோக்கி சுகமேன் என்றேன்;
வந்ததோர் அசுவமென்றார்; கோர மென்றார்; மயங்கி நின்றேன்;
மாமா வென்றார் நொந்தழுதேன், பலர் மொய்த்தார், வாசியெனத் தேளி
நின்றே னுவன்ற யாவும் அந்த முறும் குதிரை யென்று சொல்லிச்
சினந்தார், நாணமிகுந்தஞ்சினேனே.

என்று கூறி வருத்தமடைந்தாள். ஆகையால் பெண்கள் ஒவ்வொருவரும் ஆங்கிலமோ வேறு எந்த பாஷையோ கற்காவிடினும் நம் தாய் பாஷையான தமிழ் மொழியைக் கற்க வேண்டியதவசியம். ஆதலால் நம் நாட்டிலுள்ள பெண்கள் அவசியம் கல்வி கற்று முன்னேற்றம் அடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை நினைத்துத் துதிப்போமாக.

ஏழை அன்பர்கள்

BY

P. Sankarasubramaniyam. V Form. B.

ஒரு நாள் மாலை சுமார் 6 மணி இருக்கும். கதிரவன் தன் பொன்கிரணங்களோடு மேற்குத்திசையில் இப்பூவுலகில் இருக்கும் மானிடர்களுக்கு ஆச்சர்யத்தை கொடுக்கும்படி ஆழ்ந்தான். அவ் வமயம், பிள்ளைகள் பலர் விளையாடி விட்டு, தத்தம் இல்லங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். ஏழைக்குடியானவர்கள் நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைத்து விட்டு, ஆவலுடன் தங்கள் வீட்டை நோக்கிச்சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது, சுந்தரபுரி நகரமே ஒரு சுந்தர (அழகாக) மாக விளங்கிற்று.

அப்பொழுது, இவ்வற்புதங்களையும், கதிரவனின் வனப்பை யும், ஆச்சர்யத்துடன் இரண்டு சிறிய வடிவங்கள் பார்த்துக்கொண்டு இருந்தன. இவர்கள் நின்று கொண்டிருந்த இடம் மானிடர்களால் மிகக்கேவலமென நினைக்கும், ஆதித்திராவிடர்களின் குடிசையின் பக்கம். மேலும் அவர்கள் நின்று கொண்டு இருந்தவிடம் சுந்தர புரிக்கு வடக்கேயுள்ள, கந்தர்வபுரிக்குச் செல்லும், ராஜபாட்டை. அவ்வுருவங்களில், சற்று உயரமாய் இருந்தவன், கோபாலன், இவனுக்கு வயது ஏழே. இவன் அருகிலிருக்கும் மற்றொரு உருவம், இவனது 5 வயது தங்கை ராஜி.

அச்சமயம், தற்காலத்தில், "ரோல்ராய்ஸ்" என்று கூறும்படி யான, மிகச்சிறப்புற்ற மோட்டார் வண்டி ஒன்று, மிகவும் சந்தடி செய்யாமல் வெகு வேகமாக வந்துகொண்டிருந்தது. இன்னும் இரண்டே அடிகள் தான், அக்குழந்தைகளின் மேல் கார் ஏறு வதற்கு இருந்தது. மோட்டார் ஓட்டிவந்தவர் மிகவும் பணக்காரர் போல் தோன்றியது. இன்னும், சற்று நேரத்தில் நடக்கப்போ கும் கொலையை இவர் அறிந்தாரில்லை. அவருடைய மனம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தது.

பின்னால், ஏதோ சல சலவென்று கேட்கும் சப்தத்தைக் கொண்டு இளையவள், திடீரென்று சாலையின் ஓரத்தில் ஓடிவிட்

டாள். ஆனால் மூத்தவன் ஓடப்போகும் சமயம், படார் என்று ஓர் இடிவிழுந்தது. அவ்வளவு தான் மூச்சு பேச்சு ஒன்றுமில்லை கார் தட்டென்று நின்றுவிட்டது.

அச்சாலையின் அருகேயிருந்த சேரியானது சுமார் ஐம்பது வீடுகளால் சூழப்பட்டு இருந்தது. அச்சாலையின் வடபுறத்தில் ஒரு சிறிய குடிசை, வெளிப்பார்வைக்கு, அது ஏழு மாமாங்கத்திற்கு முன் கூடிய தோற்றத்தைத்தந்தது. அதன் மேல் கூரைக் கரையானால் அரிக்கப்பட்டு புஷ்பமாரி போல் உதிர்ந்து கொண்டிருந்தன. ஒட்டடைகள் தங்கள், தங்கள் குடும்பங்களுடன் கர்ண பரம்பரையாக வசித்து வருகின்றனவோ என விருந்தன. சுவர்கள் இரண்டு பிளவாகப் பிளந்து, தமது வாழ்வு, இன்றோ, நாளைக்கோ என்று விண்ணைப் பார்த்துக்கொண்டிருந்தன. அங்கு சுவற்றிற்கு நேராகத் தரையில் மண்டியிட்டு உட்கார்ந்துக்கொண்டு ஒரு பெண் எதிரே மாட்டியிருந்த ஒரு விநாயகருடைய படத்தைத் தொழுதுக் கொண்டிருந்தாள். அப்படம், மிகவும் கந்தலாயும், அழுக்கடைந்தும், தாம்பூல நீர்களால் பட்டைய மடிக்கப்பட்டும் இருந்தது. அப்பொழுது, அப்பெண், ஏ! ஜெகதீசா, உன்னை தினபந்து என்று புகழுகிறார்களே, என் விஷயத்தில், இது பொய்த்து விட்டதே! நான் இன்னும், எத்தனை நாள் கஷ்ட ஜீவன் செய்வது? கணவனும் நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழைக்கிறார். ஆனால் அவருடைய ஜீவனம், கால் வயிற்றுக்கஞ்சிக்குக் கூட போதவில்லையே? என்று தன் வறுமையை நினைத்து அறற்றிய வண்ணமிருந்தாள். அச்சமயம் "ஆம், தெய்வத்திற்குக் கண்ணில்லையா? அடியவர்களைத் தெய்வம் என்று தான் கைவிட்டார்"? என்று கூறியவண்ணம் அவள் கணவன் உள்ளே நுழைந்தான்.

அவ்வார்த்தைகளை எதிர்பார்க்காதவளாய், அப்பெண் திடீரென்று மருண்டு, திரும்பிப்பார்க்க, தன் கணவன் எனத்தெரிந்து, அவனை அன்புடன் வரவேற்றாள். இத்தகைய துர்ப்பாக்கிய பெற்றோர்களின், குழந்தைகளே மேற் கூறியவர்கள்.

மோட்டாரில் அடிப்பட்ட, கோபாலன், தன் சுயநினைவின்றி, பாரின் மீது கிடந்தான். முதுகில் ரத்தம் பீரிட்டுக்கொண்டு வந்தது. காரிலிருந்த ராஜப்பய்யர், தன் சுயநினைவு பெற்றவராய்

கீழேயிறங்கி, மெதுவாக தூக்கினர். இச்சம்பவங்களைக் கண்ட அச் சிறு குழவியின், சிற்றறிவுக்கு, அண்ணன் காரில் அடிப்பட்டிருக்கிறான், என்று எண்ணமே புலப்பட்டது.

நிற்க, பறைச்சேரிக்கு மோட்டார் வரும் என்பதே அபூர்வமாதலால், ஆங்கு கூடியிருந்த ஜனங்கள், தனவானையும், காரையும் மாறி, மாறிப் பார்க்கத்தொடங்கினர். ஆங்கு கூடியிருந்த சிறுவர்கள், தங்கள் விளையாட்டுகளைக் காரினிடம் காட்டத்தொடங்கினர். இதைக்கண்ட பெரியோர்கள், அதைத் தெய்வலோகத்து விமானம் எனக் கருதி நமஸ்காரம், முதலியன செய்யத்தொடங்கினர்.

அடிப்பட்ட குழந்தையை கையில் தூக்கிக்கொண்டு, ராஜய்யர் முன்பு கூறிய வீட்டினுள் நுழைந்தார். தம் குழந்தை, அடிபட்டு, ஒரு கனவான் தூக்கிக்கொண்டு வருவதைக் கண்ணுற்று, பெற்றோர்கள், அடியற்ற மரம்போல் மண்ணில் சாய்ந்தனர். அவர் அக்குழந்தையைக் கீழே படுக்கவைத்துவிட்டுத் தொங்கின தலையுடன் வீட்டிற்குச் சென்றார்.

சென்றவர் தமது காரை நேராக "ஆனந்தபவனம்" என்ற தமது பங்களாவை நோக்கி செலுத்தினர். அப்பங்களா மிகவும், அழகாகவும், பலவகை விருக்ஷங்கள் பொருந்தப்பெற்றும், மனதிற்கு மிகுந்த ரம்யத்தைக் கொடுத்தது. ஆனல்; ராஜப்பய்யருக்கு அவைகளெல்லாம் விஷம்போல் தோன்றின. அவ்வேளையில் வீடு, அவர் கண் முன் தோன்றித், தோன்றி மறைந்தது.

வந்தவர் நேராகத் தமது அறையை நோக்கி நடந்தார். அவ்வறை அநேக நாற்காலிகள், மேஜைகள் முதலானவைகள் அமைக்கப்பெற்று இருந்தது. பெருமூச்சுடன், திடீரென்று சோபாவில் சாய்ந்தார். பணியாட்கள் எவ்வளவு சைத்தியோபசாரம் செய்தும், அவருடைய உள்மர்மத்தை அறியாதவர்களாய்த் திகைத்து நின்றனர். இச்சம்பவம் நடந்து இரண்டு மணி நேரமாகிவிட்டபடியால் அப்பொழுது மணி 8 ஆகிவிட்டது. வேலையாட்கள் வீட்டை நோக்கி ஏகினர்.

கூட்டத்தில் மாட்டியிருந்த சுவரில், மணி 2 அடித்தது. அப்பொழுது, "வானவர்கள்" பூமியில் நடக்கும் அற்புதச் செயல்களை எட்டி எட்டிப் பார்ப்பதுபோல், விண்மீன்கள், ஆங்காங்கு தோன்றி மறைந்துக்கொண்டிருந்தன. முகிலினங்களால் அவர்களின் நேத்திரானந்தத்திற்கு யாதொரு இடையூறுமில்லை. விண்மின்களின் சிற்றொளியைத் தனது பேரொளியால் மறைக்கும் கதிரவன் இன்னும் தோன்றினனில்லை. அப்பொழுது அவர் மெல்ல அடிமேல் அடிவைத்து, கதவைத் திறந்துக்கொண்டு, கார் நிலையத்தை நோக்கி நடந்தார். அக்கார் மிகவும் விலையுயர்ந்ததால் மற்ற கார்களைப்போல் கடபுடா என்ற சப்தமின்றி நிலையத்தை விட்டுக் கிளம்பியது. பின் பறச்சேரியைநோக்கி ஓடிக்கொண்டு இருந்தது. முன்பு கூறப்பட்ட இல்லம், வந்து சேரவே கார் நின்றபிறகு மெதுவாக கீழேயிறங்கி. உள்ளே சென்றார். அங்கு மாலையில் அடிபட்ட பையன் சோர்ந்து வீழ்ந்துகிடந்தான். தாய் தந்தையர்கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். அவர் ஒவ்வொருவரையும் பார்த்துக்கொண்டு வந்தார். தகப்பனின் முகத்தில் குடும்பக் கவலைகள் தோன்றின, தாயின் முகத்தில் தன் பிள்ளையின் துக்கக்குறி தோன்றிற்று. கோபாலன் முகத்தில் வலியின் உபத்திரவத்தால் தோன்றும், விகாரக் குறிப்புகள் தோன்றின. ஆனால் கடேசியாக—அதோ—அதோ—அச்சிறு குழவியின் முகம் சூரியனைக்கண்ட தாமரையைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. தூக்கத்திலும் விஷமக்குறிகள் மறையவில்லை.

மெதுவாக விநாயகர் படத்திற்குப் பின்னால், உள்ள அலமாரியில், அவர் ஒரு பெரிய பணப்பையை வைத்தார். அச்சமயம் யாரோ விழித்துக்கொள்வதுபோல் சத்தம் கேட்கவே, அவர் திடீரென்று திரும்பிப் பார்த்தார். உடனே, ஓடிச்சென்று, தன்னை நோக்கிவந்த அச்சிறுமியை தூக்கி முத்தமிட்டார். பிறகு தன் தாய் தந்தையருக்கு தான் வந்த வரலாற்றைத் தெரிவிக்கவேண்டாமெனக்கூறி மறைந்து விட்டார்.

பொழுது விடிந்து வழக்கம்போல் விநாயகரைத் தொழுது விட்டு ஏதோ எடுப்பதற்காக அலமாரியைத் திறந்தாள். இல்லக் கிழத்தி அவள் அங்கு கண்டதென்னே! உடனே அவள் மனத்தில் என்ன எண்ணங்கள் உலாவின! இவற்றை இங்கு விவரிக்கவும் வேண்டுமோ?

வஞ்சனை

BY

R. Lakshmanan V. Form B. S. H. S.

"நெஞ்சறி துன்பம் வஞ்சனை செய்யும்"

"வஞ்சனை செய்வாரோ டிணங்க வேண்டாம்"

வஞ்சனையென்பது தாம் செய்வதைப் பிறரறியாமல் ஏமாற்றுதல். பிறரை ஏமாற்றுவதும், பிறர் வேறு விதமாக எண்ணி ஏமாறும் வண்ணம் பேசுதலும், பிறர் பொருளைக் களவாட நெஞ்சால் நினைப்பதும் வஞ்சனை "நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை" யென்றபடி தன் நெஞ்சு அறியாமல் வஞ்சித்தல் ஒருவருக்கும் இயலாது. ஒரு மனிதன் இயற்றும் செயல்களுக்குக் கடவுளே சாட்சி. ஆகவே ஒருவனுடைய வஞ்சனையை அவனும் (அதாவது அவனுடைய மனமும்) மனத்தையிருப்பிடமாகக்கொண்ட கடவுளும் அறியலாம். எவனும் வஞ்சித்துவிட்டு பிறரொருவருமறியவில்லை எனக் கருதுவது அவனது அறியாமையே என்பதை

"மறைமொழிப்பட்ட பழமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப்பறக்கும்—கழிமுடைப்
புன்புலால் நாற்றம் புறம் பொதிந்து மூடினும்
சென்று தைக்கும் செயார் முகத்து"

"வஞ்சித்தொழுகுமதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோமென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முள்ளனொருவன் காணுங்கொலென்றஞ்சி
யங்கங்குலைவதறிவு" (குமர குருபரர்)

என்ற பாடலாலறியலாம்.

எவனும் இரகசியமாகச் செய்த காரியத்தைக் கடவுள் வெளிப்படுத்தி விடுவார். ஆகவே யாவரும் பிறரை வஞ்சிக்கக் கனவிலும் கருதக்கூடாது. செல்வம் வஞ்சனையற்றவரிடம் தாமே வந்து சேரும் என்பதை

"நீரும் நிழலு நீலம் பொதியநெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வு—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கென்றும்
தருஞ்சிவந்த தாமரையாடான்"

என்பதாலறிக.

உதாரணமாகத் தென் நாட்டில் சங்கமபுரமென்று ஒரு நகரம் இருந்தது. அதற்கரசன் சந்திரவர்மன். அவன் மிக உத்தமன் அவன் மனைவியின் பெயர் சாரமதி. அந்த அரசன் சத்ய கோஷன் என்றவனைத் தனது தலைமை மந்திரியாகக் கொண்டவன்

சத்ய கோஷன் பெயருக்கேற்றபடி உண்மையே பேசுபவன் மிகவும் நல்ல குணம் படைத்தவன்.

இது நிற்க, ஒரு வியாபாரி இரத்திரத்தீவையடைந்து, அங்கிருந்து விலையில்லா இரத்தினத்தை எடுத்து வந்தான். அவன் அதை விற்க நினைத்தான். அது விற்பனையாகும் வரை மந்திரியினுடைய நல்ல குணத்தைக் கேட்டு அவனிடம் அதைக் கொடுத்து வைத்திருந்தான். பிறகு அதைத் திரும்ப கேட்டபொழுது, ஏதோ காரணத்தால் வஞ்சனையினால் தூண்டப்பட்டவனான மந்திரி "நீ என்னிடம் வைரமே கொடுக்கவில்லை. நீ சொல்லுவது முழுதும் பொய்" என்று சாதித்து விட்டான். என்ன வஞ்சனையின் கொடுமை! வியாபாரி அரசனிடம் முறையிட்டான். அரசனும் எவ்வளவோ கஷ்டப்பட்டும் உண்மையறியாது தவித்தான்.

சாருமதி தன் கணவரிடம் ஓர் தந்திரத்தைச் சொன்னாள். அதாவது சாருமதி தன்னுடைய க்ரீடத்தையும் மந்திரியினுடைய பெயர் பதித்த மோதிரத்தையும் பந்தயம் வைத்துச் சொக்கட்டான் ஆடி, எப்படியாவது கஷ்டப்பட்டு ஜெயித்து அவனது மோதிரத்தின் மூலம் வஞ்சனையையறிய வேண்டுமென்று நினைத்தாள். இவ்வாறு இருவரும் ஆடியதில் கடவுள் அருளால் இராணி ஜயித்தாள். உடனே மோதிரத்தை வாங்கி தன் தோழியிடம் ஒருவருக்கும் தெரியாமல் "மந்திரியின் வீட்டுப் பொக்கிஷதாரிடம் போய் மந்திரி அரண்மனையிலிருக்கிறார் அவர் வியாபாரியின் வைரங்களடங்கிய பெட்டியைக் கேட்டனுப்பியிருக்கிறார். அதற்கறிகுறியாக அவர் தனது மோதிரத்தையுமனுப்பியிருக்கிறார்." என்று சொல்லி அப்பெட்டியை வாங்கி வா என்றாள். அதேபோல் அங்கு போன தோழி பெட்டியுடன் திரும்பினாள். உடனே வஞ்சனையுள்ள சத்ய கோஷன் மந்திரிப் பதவியினின்றும் விலக்கப்பட்டு வியாபாரி தன் வைரங்களை மீளவும் அடையப்பெற்றான்.

NOTES

Sports :

Our school has had the good fortune of winning the Volley Ball Shield in the Inter Schools Tournament for the second year as well. Success for another year yet will secure the shield permanently for our school. While our students should be congratulated for the high class game that they played in all decorum during the FINAL match, it is confidently hoped that the very same sportsman spirit will carry them through to success next year also.

Associations

The Tamil Association of the School, the Senavaraiyar Sangam has been holding meetings at regular intervals under the presidency of the Tamil Pandits of this school and also of other schools. In November last (25-11-36) an interesting debate was conducted under the presidency of Mr. Heramba Aiyar Avl., the Junior Tamil Pandit of the school. V. Jayaram and M. G. Vaidhyanathan, both belonging to VI Form B, led the discussion. The subject was :

நாட்டிற்கு நன்மை விளைவிப்பவர் யார்—போர் வீரரா அல்லது மதியூகிகளா ?

The meeting was well attended and students took active part in the discussion. The decision reached at the close of the gathering was in favour of 'மதியூகிகள்'

In December (7—12—36) an ordinary meeting, was arranged, when V. Ramaswami VI A, spoke on கல்வி நிலை and Vidwan Karnavatara Konar presided. The presidents' elucidation of the subject was as once masterly and interspersed with instructive references to modern conditions of education in our mother-land.

Botany Excursion.

The Botany students of the Sethupati High School, went on an excursion to the Palni hills under the able guidance of their Botany Assistant, Mr. V. S. Ananthapadmanabhan B. Sc., during the third week of December.

The party left for Palni on the night of 22nd December and reached the place on 23rd morning. They had their lodgings in the local High School at Palni. The students engaged themselves in the study of the various plants and showed a great deal of interest in their work. They were able to identify the specimens of plants they were taught in their class. Among the specimens collected are sappran (Bixa Orellena) and Sengodivel (Plumbago rosea).

After a stay of two days they left for Dindigul to visit the Umayan Kottai which is of archaeological and historical importance. This fort was found to contain very interesting specimen which are important by themselves for their morphological characters. Species of Asparagus. (cladodes and Root tubers.)

On the whole the excursion was pleasant and also educational. We have to thank the authorities of the Palni High School, for their kindness in placing their premises at our disposal throughout our stay there.

ஃ ஃ ஃ ஃ

The following students of the Setupati High School top the list in the Fine Arts Competition held for the second quarter of the current year.

K. Ibramsa	VI B.	I
V. Bakthavatsalam	Do	II
C. Narayanan	V C	I
N. Durairaj	V A	II
P. Sankarasubramanian	V B	II

A. Ramaswamy	IV C	I
S. Subramanian	Do	II
S. Lakshmi	IV D	I
R. Sita	Do.	II
D. Krishnamurti P. M. Venkatakrishnan	III A III B	I
P. K. Krishnamurti G. S. Venkataramanan R. Ramachandran	III A III B Do.	II
T. S. Krishnamurti W. C. Padmanabhan	II A II B	I
V. Sundararaman	II C	II
S. Rajagopal V. Manickam	I C Do.	I
S. Shunmuganathan S. Narasimhan T. E. Kuppu Rao	I C I A I B	II

PLAY TIME

BY

Bharath Ram

> Ah! What avail the largest gifts of heaven,
> When drooping health and spirits go amiss?
> How tasteless then whatever can be given!
> Health is the vital principle of bliss,
> And exercise of Health...... —THOMAS

Exercise is necessary for the healthy development of our body. According to the saying, "Prevention is better than cure", we should rather avoid diseases than pay doctors for medicine. The best way to escape disease is to take physical exercise daily and regularly. Dryden says:

> Better to hunt in fields for health unbought,
> Than fee the doctor for a nauseous draught.

The reason why men are generally weak in body is that they do not take sufficient physical exercise. Students studying at School or College generally keep indifferent health. The

reason of this is not far to seek. It is their negligence in taking sufficient exercise. This exercise they ought to take to counteract the brainwork they have to do all day long.

Health is the first good of man. Addison says : " As I am a compound of soul and body, I consider myself as obliged to a double scheme of duties ; and I think I have not fulfilled the business of the day, when I do not employ the one in labour and exercise, as well as the other in study and contemplation."

Men of different constitutions should take one of the many kinds of exercise that suits each best. Of these the three that are most used are (i) walking, (ii) games and (iii) gymnastics. Men of weak constitution should not engage in the latter, as these not only do them no good, but are even injurious.

Herbert Spencer remarks : "For girls as well as boys, the sportive activities to which the instincts impel are essential to bodily welfare. Whoever forbids the divinely appointed means to physical development."

" Health, without which life is not worth living." observes Cobbet, " you will hardly fail to secure by early rising, exercise sobriety and abstemiousness of mind." A walk in the country is preferable to one in the town, for interesting things are to be found in the country, Nature there plays an important part and the health of an individiual depends very largely upon the amount of fresh air he breaths daily. " Oxygen is good in the physical plane" If we live in the open we ensure long life and keep the best of health. In the Puranas, Bhishma and Hanuman are both described as having been very strong, and they are said to have been " Sons of Air " Therefore, to live long and to be strong, we should take a walk daily in the open air.

In walking, as in everything else, it is imperative to avoid extremes. The muscles must not be overtaxed at the start. The way to walk is to throw back your shoulders in military fashion—the chest out and expanding, the head erect, no mouth breathing. Pretty nearly every muscle is thus in play. You

should have your mind diverted by the ever changing scenery; there is no way equalling this, by which the cobwebs may be got out of the brain".

Cricket is now one of the most important sports, only because it combines social enjoyment with physical exercise. Swimming, riding and other such sports are also useful forms of exercise. Sunlight is necessary and is conducive to health though excess of light may prove prejudicial to the eyes.

Also we should be clean in body if we would be healthy. "Cleanliness is next to Godliness." Health is the reward of cleanliness. Cleanliness promotes both health of body and peace of mind," says Addison. It is essential for the preservation of health, because it assists digestion, keeps the pores of the skin open, and prevents many contageous diseases.

There are many advantages to be derived from physical exercise· By taking exercise, our stomach becomes active and digestion is improved. Not only that, but also our bones and nerves and muscles become strong, and such vital parts as the heart, the liver, the brain, and the lungs are kept in good order. By it we escape disease and our life is lengthened. It makes us happy and gay. It begets strength and character. "Without health, no happiness", and no health without sufficient physical exercise. It gives beauty, and is useful for adding to our mental and moral strength.

Care should be taken not to take too violent exercise. If a limb or organ be weak, gentle exercise only should be taken, so that no injury may be caused.

The pith and marrow of all the above remarks is that exercise must be taken in order to live a long life and to be happy. Take exercise then, and you will be well, in future well off.

"Work while you work.
Play while you play
That is the way
To be happy and gay."

தருமம் என்பது யாது.

BY

T. N. Eswaram. VI Form A. A. R. H. S.

உலகில் பிறக்கும் எவ்வொருவனும் தன்னுயிரைப்போல் பிறவுயிர்களையும் கருதி அவைகட்கு ஏற்படும் துன்பங்களைத் தனக்கு ஏற்பட்டவைகளாகத் பாவித்துத் தன்னாலியன்றளவு உதவி புரிவது அவசியமாம். இது தான் தருமம் எனப்படும். எவ்வளவு செல்வத்தை ஒருவன் பெற்றிருந்தபோதிலும் அவன் பிறருடைய உதவியில்லாவிடத்து உலகத்தில் வாழ்வது அருமை. யாவரும் ஒருவருக்கொருவர் தன்னாலியன்ற வரை உதவி செய்துக்கொண்டு வந்தால் தான் ஜன சமூகவாழ்க்கை நடைபெறும்.

இயற்கையில் மனிதன் முற்றும் சுய நலத்தையே கருதுபவனென்றும், பரோபகாரசிந்தை அவனிடத்துச் செயற்கையாலுண்டாகிறதென்றும், அவ்வாறு செயற்கையாலுண்டாகும் சிந்தையும் ஒருவித சுயப்பிரயோசனத்தை முன்னிட்டு உண்டாகின்றதென்றும் தத்துவ சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகின்றனர். ஒருவன் ஒரு ஏரிக்கரை வழியாய் போய்க்கொண்டிருக்கும் பொழுது ஒரு குழந்தை கரைக்கு அருகில் தண்ணீர் தத்தளித்துக் கொண்டிருப்பதைக்கண்டு அதிவிரைவாக ஓடித் தன்னாலியன்ற உதவி புரிந்து அக்குழந்தையைக் காப்பாற்றினன். அவனை அந்தக் காரியம் காரியம் செய்யும்படி தூண்டியது எது? இயற்கையிலேயே அவனிடத்து பரோபகாரசிந்தை அமைந்திராவிட்டால், அவன் ஏன் அந்தக் காரியத்தை செய்யவேண்டும்? தத்துவ சாஸ்திரிகள் கூறுவது யாதெனில், தன்னாலியன்ற ஓர் உபகாரத்தை அக்குழந்தைக்குச் செய்து அதனைத் தப்புவித்தினல் அவனுடைய மனதில் ஒரு வித திருப்தியும், மகிழ்ச்சியும் உண்டாகின்றன. அவ்வாறு செய்யாவிடில் ஒரு அதிருப்தியும், துக்கமும் அவன் மனத்தில் உண்டாகின்றன. கர்ணன், மாபலி, சிபி, குமணன் முதலியவர்கள் வரையாது வழங்கியவள்ளல் என்னும் பெயர் பெற்றவர்கள்.

தருமசிந்தையின் பயனாகிய ஈகையைக் குறித்துச் சிறப்பித்துக் கூறிய பெரியோர்களே ஏற்பதைத் குறித்தும் இழிவாகக் கூறியிருக்கின்றார்கள். சிறுவர்கள் இளம் பிராயத்தில் கற்கும் நூலாகிய

ஆத்திச்சூடியில் ஔவைப் பிராட்டியார், "ஏற்பதிகழ்ச்சி," "ஐயமிட்டுண்" என்னும் வாக்கியங்களை அடுத்தடுத்து அமைந்திருக்கின்றனர். இவை ஒன்றுக்கொன்று முரண்படுவதாகச் சிலர் மயங்குகின்றார்கள்.

தன்னை வந்தடைந்தவனுக்கு அவன் கேட்பதைக் கொடுக்க இயலாதவிடத்து அவ்விறத்தலும் அவனுக்கு இனிதாகும் என்று ஆன்றோர் கூறியுள்ளார்கள். இறத்தற்கு அஞ்சுதலே மண்புடைமையென்று பல நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றது. யாசித்தல் அவமானமென்றும் ஐயமிடுதல் ஒவ்வொருவனுடைய கடமையென்றும் ஒரே நூலிற் சொல்லின், நாம் எதைக் காப்பாற்றுவது என்னும் வினா நிகழும்; வறியவர்களுக்கு நோயாளிகளும் ஆதரவற்றவர்களுமானவர்கள் இருக்கின்றவிடத்தைத் தேடிப்போய் நாம் உபகாரஞ்செய்ய வேண்டுமென்பதே மேலோர் கருத்து. இதனைச் சிலப்பதிகாரச் சுவாமிகள் கீழ்வருஞ் செய்யுளில் விவரித்துள்ளார்.

"என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோர்
நாவிற்குதவு நயந்து."

தற்காலத்தில் நம் நாட்டில் வேலை செய்ய சக்தியுள்ளவர்கள் அதிகாரப் பிட்சை வாங்கி வயறு வளர்க்கிறார்கள். அவர்களுக்குப் பயந்து பிட்சை கொடுத்துச் சோம்பலை வளர்க்கும் நம்மனோர் நம்முடைய தேசத்தில் எவ்விடங்களிலும் கைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது என்னும் அரிய பெரிய தருமத்தை ஆங்கிலேயரைப்போல் காலதாமதமின்றிச் செய்யின் நம் நாடு மேம்பாட்டையும் வறியர் பிழைக்க. வழி காண்பிப்பதை விட வேறே தருமமுண்டோ? வறியவர்கட்கு ஏராளமாய்ப் பொருள் முதலியவற்றை வழங்கி அவர்களைச் சோம்பேறிகளாக்குவதை விட அவர்கள் அவர்கள் பிழைப்பதற்கு வழி தேடிவைப்பதே பெரிய தருமமாகும்.

BOOK REVIEWS

" (Education through Museum : by J. C. Basak, published by the author; 363, Upper Chitpore Road, P. O. Beadon Street, Calcutta. XIV—68 6as)

"Education through Museum" is the title of a 'little big book' by Mr. J. C. Basak of Calcutta. The book itself occupies a unique place among the books published so far; for, it is strangely enough, a fortyeight page summary of a sixty-five page book. To one who has not gone through the bigger book, it would certainly appear strange that the author should have spent so much time and money upon summarising a book which itself, if the number of pages mean anything, is almost a booklet. The author, however, has indicated clearly his object. In his own words " My object of publishing the reviews of a book of 65 pages in 48 pages of another book of bigger size might obviously be misinterpreted or misjudged by the readers, and hence a word in making the object clear should perhaps not be out of place. The 'Reviews' were not published to show the importance of the book, as is customary with authors or publishers who are impelled by mercenary motives, but rather to show the importance of the subject treated in the original book. Considering that I freely distributed 98 per cent of the book, my object in publishing the 'Reviews' can never be attributed to any desire on my part to push on the sale of the book and its Reviews. My object in publishing book after book on the same subject is to repeatedly draw attention, by appealing to the stock of reasoning of those who are inclined towards educational reforms, as also to the great importance of educational reforms, as also to the great importance of Educational Museums.

It is really strange that educational authorities in India should have not yet come to realise the importance of museums in the educational reconstruction of our country. As it is, the museums that we have, have little to do with education proper. Generally speaking masses do not take any educational interest in the museums that we have. The museum autho-

rities, on the other hand, are satisfied by merely showing to the Government that large number of persons visited their museums. In short, Mr. Basak is right when he says that the majority of our museums satisfy only the needs of curio-hunters. They are certainly dumb in all other respects. India is so backward in the race of advanced nations that even most of the educated persons entertain the notion that unless a museum collects articles of curiosities, it is no museum at all. The author fortifies his conclusions by drawing pointed attention to the educational progress of Russia, where the educational museums have played a very important part in the educational emancipation of the land. We cannot better conclude the review than quoting the words of the author:-

"In conclusion let me make an earnest and ardent appeal to all Government officials who are in charge of the Departments of Education, Industries and Agriculture, to the Rulers of Indian States, to the authorities of universities, Colleges and Schools and all those who have a strong desire to educate the people of India in the right direction, to calmly think over the above proposals and take active measures for carrying out the scheme. May, by the Grace of God, sympathy for the ignorant masses be generated in the mind of the educated people. Let the young men be well-trained for industrial pursuits. This is one of the means to educate the people and to improve the industry of India."

It is needless for us to add that the book of Mr. Basak has a claim to be in the hands of every student in India.

x x x x

(Educational Reformation in India: by "Experience" published by J. C. Basak; 363, Upper Chitpore Road, P. O. Beadon Street, Calcutta. VIII—271. Re I)

"Educational Reformation in India" is another book by Mr. Basak which has been kindly sent to us for review. We have already made a reference to it under 'On the Temple Tower'. A detailed review of this will appear in the next issue.

HOW THE MOVEMENT GOES

This month we shall take a ramble through several provinces in North India and compare the work done there with the work in the South, particularly in the field of National Education. This is facilitated by the fact that one of the workers amongst us had been on a tour in the North and visited some of the prominent Institutions working there in that field.

ߎ ߎ ߎ ߎ

In the South we cannot boast of any well-organised institution working in the field of National Education which can be said to have a distinctive individuality of its own, making certain unique contributions on its account for any considerable length of time. The Pachayappa's College at Madras, which is a National Institution, is scarcely distinguishable from any Government or Missionary College. The Annamalai University which owes its origin chiefly to the philanthropy, enthusiasm and inspiration of a prominent citizen of this province cannot be said to have fully realised its original aim of fostering the South Indian Culture apart from the Music Academy, and the Institution for Oriental Learning which are there existing. It is not dissimilar to the Madras or Andhra University. In North India our visitor saw four outstanding movements, well-organised, having substantial support from sections of the public, sympathising with their aims and objects, and showing great stability. They are the Hindu University of Benares, Educational Institutions founded for the support of Sanatana Dharma, the Colleges, professional and technical Schools, Orphanages and Gurukulas, started and maintained by the Arya Samaj, and the grand movement comprising an educational institute for boys, a college for women, a textile factory, a technical college, dairy and farms etc., carried on by Radasaomi Sat Sang under the leadership of the founder Shri Sahibji Maharaj, head of that religious community. In a

previous issue of the Magazine,* we gave an account of the extent of the educational activities of the Arya Samaj on the occasion of the Jubilee celebrations of the Dayanand Anglo Vedic College, Lahore. We shall not traverse over the same ground except mentioning here about a visit made to the Headquarters of the Arya Samaj in New Delhi, the Imperial Capital, where education is imparted to the young on national lines and ladies belonging to the Samaj gather at certain stated hours in the day to perform 'Havan' and to chant songs and stotras, and another visit paid to Dayanand College at Cawnpore, presided over by a distinguished educationist, Mr. Diwan Chand who was for some time Vice-Chancellor of the University of Agra. The College is housed in a building constructed at a cost of about 4 lakhs of rupees raised by public subscriptions and has extensive hostel accommodation in buildings specially built for the purpose. The College is indebted for its vigourous existence mainly to the dedicated spirit and self-sacrifice of Principal Diwan Chand. It sends its students for the examinations in Law, B. A., and M. A., B. Com. and B. Sc. of Agra University. Among its various associations in the College we note with interest a Commerce Union, an Athletic Association with a section for boating and scouting along with other usual Students' Societies, Arya Kumar Sabha, evidently intended for inspiring the Arya youth with high ideals of life and conduct and the Hanuman Akhada, which as its name indicates, is specially devised to give physical culture, especially on indigenous lines, where the students after taking their daily exercises, are given 'chana' whose distribution, as the report says, has been compulsorily introduced by the U. P. Government in Schools and Colleges.

ஃ ஃ ஃ ஃ

We shall next turn our attention to Benares Hindu University under the inspiring leadership of its Vice-Chancellor, Madan Mohan Malavya. It is the first Residential and teaching

---

* **Vide Nov. 1936.**

University to be established in India. One of the declared objects of the University is "to promote the building up of character in youth by making religion and Ethics an integral part of Education". It was founded only in 1916. The University has established colleges of Arts, Sciences, Law, Ayur Veda, Engineering, a Teachers' Training College of Theology, a College of Oriental Learning, a College for Women, Departments of Ancient Indian History and Culture, of mining and metallurgy, Industrial and Pharmaceutical Chemistry, Soaps and ceramics, and an Institute for Agricultural Research besides arranging Sunday Gita Classes and Lectures in Religion The University has already created 150 lakhs of rupees and has an annual income of 12 lakhs of rupees. The Vice-Chancellor is appealing for the raising of a fund of 350 lakhs of rupees more and a carefully thought out five years' plan is being prepared to bring the collections to full 5 crores before the University celebrates its Silver Jubilee in 1941.

There is a Sanatana Dharma College at Cawnpore whose Principal is Mr. H. K. Battacharya, M. A. The College building has been raised at a cost of about 4,00,000 and has an extensive hostel built specially for the purpose. It stands for the support of the ideals of Sanatana Dharma as Dayanand College stands for the support of the ideals of Arya Samaj.

Dayalbagh is at a distance of a mile from Agra. A little more than 20 years ago, the site of Dayalbagh was a waste and a wilderness. Radasaomi Sat Sang was founded by Huzur Saomjai Maharaj who was born on 24th August 1818 and founded the Sat Sang in 1861. His sixth successor, according to one line of succession, is the present founder of Dayalbagh, Shri Sahibji Maharaj. Dayalbagh was founded in 1915 and the colony now extends over 3000 acres with a population of 3100 of whom 796 are students. They are a religious community

giving prominence to Bhakti or devotion to God and loyalty to their head who is regarded by them as a divine representative. They believe in some of the essential teachings of Hinduism—Evolution, Law of Karma and Re-incarnation. They are vegetarians and teetotallers ; and no smoking is permitted in Dayalbagh amongst its members. They have their religious meetings in the mornings and evenings, which every member present in the colony must attend, where they read passage from the writings of their heads, chant stotras or prayers and their leader discourses now and then.

The Assembly Hall is capable of accommodating more than 10,000 at a time divided into two halves for men and women by a partition in the middle at the head of which is seated their religious leader in a high chair able to address both sides with the help of loud speakers. The Colony has its own electric supply, water works, its own flour and oil mills, farms and factories, its own hospitals and stores, a General and Assurance Bank and a Press. Its extensive buildings are quite modern in their style, structure and equipment. No resident is allowed to own immovable properties in the colony. There is an educational institute teaching upto the Intermediate standard, "Prema Vidyalaya" which is the name for the Women's College and a textile factory, manufacturing cotton and woollen goods which find a ready market amongst the hundred thousand members of the Sat Sang scattered over the whole of India, its depots in different places helping in their distribution; it has a technical college where science and handicrafts are taught and workshop and factories where practical training is given in mechanical, electrical and automobile engineering and in other industries. All boys and girls of school going age in the colony are compulsorily required to attend school. All factories are worked electrically. All maternity cases should go to maternity hospitals. An orphanage is maintained. The United Province Government helps and encourages the arts and technical section of the educational side of the colony and has reserved places for the students in electrical engineering sent by Government. The

technical side of the colony has conducted successful exhibitions of its products under distinguished auspices in Lahore in 1931, in Patna in 1932, in Ajmere and Ambala in 1933, and in Allahabad and Delhi in 1935. It has a leather factory manufacturing high class shoes, slippers, boots, leather bags, dressing cases and all kinds of leather products which are exported even to remote Africa.

The colony engages employees to the number of 1724. It exported products to the value of Rs. 7,70,254/—in 1934—1935. It has raised and spent to the extent of half a crore on this colony up to now. Its budget estimate of income for 1935—1936 is Rs. 4,51,156/— and expenditure 4,46,690. It has a dairy, admirable in its construction, maintained with scrupulous cleanliness, possessing 184 heads of select cattle with a farm covering an area of 420 acres where special cow and bulls have been imported from America, some of them costing Rs. 3000/-- per head; the dairy at present sells about 1800 lbs of milk and 300 lbs of butter and ghee a day. The whole scheme of dairy and agricultural farms has been realised by a subscription of Rs. 1,50,000/— which the members of the Sat Sang have raised among themselves. There is a common mess catering to the huge concourse of Sat Sang members, sometimes raising to a total of Rs. 5000/— and above during periodical festivals held in the colony. Even in ordinary days, every new arrival is entitled to free food for three days. The colony owns a forest village in Central Provinces which supplies fire wood and timber to the colony. Along with distinguised visitors from different parts of India who have spoken highly of the work done here, its uniqueness has been appreciated by visitors from other lands. Its guest house is quite modern in its amenities The whole colony is a successful attempt in harmonising its spiritual object and ideals with practical effort in carrying on education and industry. Its success testifies to the union and solidarity among the members of this religious organisation, their loyalty and sense of discipline under the leadership of their chief who is the inspirer of all these under-takings, the power of organisa-

tion on and the high skill shown in the manufacture of finished products and the unique harmony maintained between its religious ideals and in the achievement of a high standard of modern technique in its manufactures which includes amongst others, high class laboratory balances and weights, platform weighing machines, science apparatus, biology models, charts and life histories, surgical instruments and dissecting sets, A.C. motors, A. C. and D C. ceiling and table fans, electric stoves, sauce pans and frying pans, irons and heaters, electric clocks, gold and silver chains and ornaments, pad and tower bolts, cutlery articles such as pen-knives, garden knives, paper cutters and kitchen knives, beautiful fountain pens, nibs, buttons and and excellent writing inks, table and portable gramaphones, woollen cloths, silk and linens, socks, hoses and undervests, foot-wear and other leather goods of numerous patterns, flour mills, accessories for motor cars and cycles and toys. Most important of all, the colony has organised a 'League of Service' consisting of devoted members, men and women, who are willing to offer their services unconditionally for life-time or for a certain number of years. There are many such workers engaged in doing honorary work, men of education, professional skill or official experience who contribute to make the several Departments of the colony useful, skilful and efficient.

Owing to want of space, we shall continue the subject in our next issue.